THE HON. SRI P. KAKKAN : The nature of schemes to be taken up for execution during the Third Five-Year Plan has not been finalised. The details of medium-sized irrigation schemes that have to be taken up in the Third Five-Year Plan are, therefore, not yet available.

SRI N. K. PALANISAMI : நாம் திட்டக் கமிஷனிடம் கேட்ட பணம் கிடைக்காமல் குறைவாக கிடைத்ததின் காரணமாக ஏற்கனவே சேர்க்கப்பட்டிருந்த திட்டங்கள் என்னென்ன பாதிக்கப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI P. KAKKAN : எதெது பாதிக்கப்பட்டிருக்கிறதென்று இப்பொழுது சொல்ல முடியாது.

Smallpox

* 637 Q.—SRI M. K. SOMASUNDARAM (on behalf of SRI P. G. MANICKAM) : கனம் ரெவினியூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு ஜில்லாவிலே ஸ்பெஷலாக நடத்தப்படும் வைசூரி ஒழிப்பு திட்டத்துக்காக இந்திய சர்க்காரிடமிருந்து கிடைத்த தொகை எவ்வளவு ?

(இ) இத் திட்டமானது எப்பொழுது முடிவடையும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The entire estimated cost of the Pilot Project, namely Rs. 2,75,300, will be met by the Union Government.

(b) By March 1961.

7th March 1961]

SRI A. A. RASHEED : What is the number of persons so far vaccinated in this district?

THE HON. SRI M. A. MANICKAVELU : I think out of a total population of 20 lakhs, about 15 or 16 lakhs of people are covered.

SRI S. NAGARAJA MONIGAR : செங்கற்பட்டு ஜில்லாவி லிருந்து இந்த வியாதியை அறவே ஒழிப்பதற்கு அது வந்த பின் தடுக்கும் முறையைக் கையாள்கிறார்களா? அல்லது வருவ தற்கு முன் எக்காரணத்தால் அது வருகிறது என்று அறிந்து அதை நிவர்த்திக்க இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக் கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : செங்கல்பட்டு ஜில்லா மட்டுமல்ல. இந்த மாநிலத்திலிருந்தே இந்த நோயை ஒழிக்கத் திட்டம் இருக்கிறது. இது இப்பொழுது ஏற்பட்டது, பைலட் ஸ்கீம். முன்கூட்டியே பார்த்து எப்படி எப்படி மேற் கொண்டு திட்டம் போடவேண்டுமென்று ஸ்கீம், ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு ஜில்லா என்ற முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பணம் மத்திய அரசாங்கம் கொடுத் தார்கள். இந்த வருடத்திலிருந்து திட்டம் போட்டு மாகாணம் முழுவதும் இத்திட்டத்தை அமுலாக்கவேண்டும். மூன்று வருடங் களில் இந்த நோயை ஒழிக்கத் திட்டம்.

SRI M. K. SOMASUNDARAM : இந்தத் திட்டம் 28-2-1961-ல் முடிவாகயிருந்தது. இப்பொழுது 31-3-1961-க்கு நீடிக்கப்பட்டிருக் கிறது. இதன் செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்கிறார் களா அல்லது சென்னை சர்க்கார் ஏற்றுக்கொள்கிறார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆகவே கொஞ்சம் காலதாமதமாகியிருக் கலாம். கவர்ன்மென்ட் ஆப் இந்தியா ஒத்துக்கொண்டுதான் நீடித் திருக்கிறோம். அநேகமாக அவர்கள்தான் இந்தப் பணத்தை ஒத்துக் கொள்வார்கள் என்று தெரிகிறது.

Medical Research courses

* 638 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether Research facilities for M.D., and other Research courses are offered in the Stanley Medical College and Hospital;

(*b*) whether any order has been passed by the Government granting sanction to the Stanley Medical College and Hospital to take up Research scholars; if so, when; and

(*c*) whether any students have applied for permission to do Research work there, and if so, whether they have been permited; if not, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Research facilities are available for Ph.D. course in Anatomy in the Stanley Medical College. No other course requires research.

(*b*) & (*c*) No, Sir.

Fishermen

* 639 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether three fishermen who went out from Porto Novo for fishing in the Bay of Bengal were missing since 24th November 1960?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: The fishermen in question left Porto Novo coast on the 13th November 1960 and are missing since then. In spite of an air search conducted by the Indian Air Force for two days, and also the action taken by the Mercantile Marine Department and the State Port Officer by alerting the ships navigating the area, the missing fishermen could not be traced. The Ceylon Government were also requested to alert their coast line villages to be on the look-out for these missing fishermen, but no information is yet available.

SRI A. A. RASHEED: May I know whether any relief has been given to the affected families who lost the head of the family?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Generally it is done, but about the families affected, I do not have particulars with me now.

Police dogs

* 640 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI): கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் இந்த ராஜ்யத்தில் துப்பறிவதற்காக போலீஸ் இலாகாவில் எத்தனை நாய்கள் இருக்கின்றன? எங்கெங்கு?

(இ) ஒவ்வொரு நாய்க்கும் நாளொன்றுக்கு உணவுக்கு **(feeding charges)** சராசரி செலவு எவ்வளவு?

(உ) எல்லா நாய்களையும் பராமரிக்க ஆகும் சராசரி செலவு எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) There are four dogs and four pups in the Madras City Police Dog Squad. Three pups of Madurai Police Dog Squad are under training in the city.

(இ) The feeding charges sanctioned by Government is Rs. 2.86 nP. per dog per day.

(உ) The expenditure incurred during 1959–60 was Rs. 2,023.08.

SRI S. M. ANNAMALAI: இந்த போலீஸ் நாய்கள் துப்பறிவதை வைத்துக் கொண்டு சாதாரணமாகத் தீர்ப்பு கூறமுடியாது என்று சென்னை ஹைகோர்ட் தீர்ப்புக் கூறியது உண்மையா? அப்படியாயின் மேற்கொண்டு இந்த போலீஸ் நாய்களை துப்பறிவதற்காக உபயோகப்படுத்தக்கூடாது என்று சர்க்கார் கருதுகிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹைகோர்ட் என்ன தீர்ப்பு கூறியது என்று என்னிடம் தகவல் இல்லை. ஆனால் இந்த நாய்கள் துப்பு அறிவதில் மிக உபயோகமாக இருக்கிறது.

7th March 1961]

SRI S. NAGARAJA MONIGAR : இந்த நாய்கள் துப்பறிவது அவைகளுக்குள்ள தனி சாமர்த்தியத்தின் காரணமாகவா? அல்லது அந்த இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கே அந்த சக்தியிருக்கிறதா? அல்லது சொல்லிக் கொடுப்பவரின் திறமையால் பழக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சற்று முன்பு விடையளிக்கும்போது சொன்னேன். சில குட்டிகளுக்கு மதுரை Squad -க்காக இப்பொழுது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே பயிற்சியில்லாமலேயே பிறப்பிலேயே இந்த அறிவு ஏற்படுவதில்லை.

SRI P. S. SANTHANAM : இந்த துப்பறியும் நாய்கள் பிடித்த கேஸ்கள் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கின்றன? எவ்வளவு உதவாக்கரையாகத் தள்ளப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை, ஆனால் அநேகமாக பல கேஸ்கள் துப்பு தெரிந்து கேஸ்கள் தொடரப்பட்டு, வெற்றிகரமாக வழக்குகள் தொடரப்பட்டு தண்டனைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. A. RASHEED : Will the Government consider the question of extending the Dog Squad to the headquarters of districts also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முதன்முதலாக மதுரையில் வைப்பது என்று முடிவு செய்து பயிற்சி அளிக்கப்படுகிறது. இதைப் பார்த்து பின்பு கோவையில் வைக்கலாம், பின்னர் மற்ற ஜில்லாக்களை எடுத்துக்கொள்ளலாம்.

SRI A. GOVINDASAMY : சில இடங்களில் குற்றவாளிகள் அல்லாதவர்களைக்கூட இந்த துப்பறியும் நாய்கள் பிடிக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே, நிரபராதிகளைக் காப்பாற்றுவதற்கு என்ன வழிவகை செய்யப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனிதனே தவறு செய்வது இயற்கை. ஆகவே நாய்களும் தவறு செய்யலாம். அப்படித் தவறு ஏதாவது இழைக்கப்பட்டால் நீதி செலுத்த கோர்ட்டார் இருக்கிறார்கள்.

Hospitals (Major Panchayat Towns)

*** 641 Q.—SRI N. R. THIAGARAJAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பத்தாயிரம் மக்களுக்கு மேலுள்ள ஒவ்வொரு மேஜர் பஞ்சாயத்து நகரிலும் பத்து படுக்கைகளுடன் ஒரு ஆஸ்பத்திரி அமைக்க ஏதேனும் திட்டமிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

[7th March 1961

SRI V. SUBBIAH: இப்பொழுது கிராமப்பகுதிகளில் வைத்திய சாலைகள் இல்லாத நிலை, டாக்டர்கள் இல்லாத நிலை, மருந்து இல்லாத நிலை இருப்பதால் 10,000 ஜனத்தொகையுள்ள இடங்களிலாவது வேண்டிய வைத்திய வசதியுடன் கூட எம்.பி.பி.எஸ். டாக்டர்களைப் போட ஏதாவது திட்டமிருக்கிறதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: 60,000 ஜனத்தொகைக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் என்ற நிலையை ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். 127 ப்ரைமரி சென்டர்கள் சாங்க்ஷனாகியிருக்கிறது. 117 தீர்ந்துவிட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 220 சென்டர்கள் திறக்க உத்தேசம். பின், 78 கவர்ன்மென்ட் டிஸ்பன்ஸரிகள், 259 சப்ஸிடைஸ்ட் ரூரல் டிஸ்பன்ஸரீஸ், 83 நான்-ஸப்ஸிடைஸ்ட் டிஸ்பன்ஸரீஸ், என்று எவ்வளவோ இருப்பதால் அநேகமாக எல்லாயிடங்களுக்கும் சிகிச்சை வசதி கிடைக்கும். அதோடு முக்கிய இடங்களில் படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தவும் தீர்மானம்.

Hindi Pandits

* 642 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஹிந்திப் பண்டிதர்களைக் காட்டிலும் ஜில்லா போர்டு பள்ளிகளிலும், இதர உதவி பெறும் பள்ளிகளிலும் வேலை பார்க்கும் அதே தகுதியுள்ள ஹிந்திப் பண்டிதர்களுக்குச் சம்பளத்தில் குறைவு ஏதேனும் உண்டா?

(இ) அப்படியானால், அதன் காரணமென்ன?

(உ) வேலை நேரத்தில் வித்தியாசம் காட்டப்படுகிறதா? அதன் விவரமென்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir. The Government have fixed uniform scales of pay for the Hindi Pandits serving under different managements from 1st June 1960.

(*b*) & (*c*) Do not arise.

SRI A. VEDARATHNAM: இந்த சம்பள விகிதத்தை எல்லோருக்கும் ஒரே மாதிரியாக ஏற்படுத்திய பிறகு இன்னும் பல ஹிந்தி பண்டிதர்களுக்கு உயர்த்தப்பட்ட சம்பளம் கொடுக்கப்படவில்லையே, அதன் காரணம் என்ன? அதைக் கொடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எல்லோருக்கும் ஒரே விகிதத்தில் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்டாய் விட்டது. எங்கேயாவது அவ்விதம் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றிருந்தால் அதைப்பற்றி சர்க்காருக்குத் தெரிவித்தால் அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

7th March 1961]

SRI A. VEDARATHNAM : மொழிப் பண்டிதர்கள் எல்லோருக்கும் ஒரேவிதமான சம்பளம்தான் கொடுக்கப்படுகிறதா, அல்லது மற்ற மொழி பண்டிதர்களுடைய சம்பள விகிதத்திற்கும், இந்தி மொழி பண்டிதர்களின் சம்பள விகிதத்திற்கும் வித்தியாசம் உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

SRI T. T. DANIEL : May I know the scale of pay for authorised Hindi Pandits and also whether our Government propose to give increased scales of pay to part-time Hindi Pandits also?

THE HON. SRI C. SUBRAMANIAM : For I Grade Pandits their original scale of pay is Rs. 140—5—180—10—250. For II Grade Pandits the scale is Rs. 90—4—110—3—140. Sometimes Grade II Pandits are asked to take up higher classes. If they take such classes for not less than 12 hours, they are entitled to a special pay of Rs. 10 per month.

Teacher's pay

* 643 Q.—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have adopted the revised scales of pay as recommended by the Madras Pay Commission to Teachers (Higher and Secondary Grade) working in Government schools;

(b) whether these revised scales are applicable to teachers working in private schools in the City of Madras; and

(c) if so, from when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Yes, Sir.

(c) From 1st June 1960.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that in two private schools in Kodambakkam and one in West Mambalam in the T. Nagar range, these revised scales of pay had not been given effect to by the officials concerned?

THE HON. SRI C. SUBRAMANIAM : I have no information.

SRI K. VINAYAKAM : Apart from the revised scales of pay, even for sanctioned posts like secondary grade teacher's vacancy, a secondary grade teacher working in that vacancy is paid only higher grade salary even though he is working as secondary grade teacher in the vacancy for the past two years. If such instances are brought to the notice of Government, will the Hon. Minister assure us that he will take immediate action?

THE HON. SRI C. SUBRAMANIAM : Individual cases should be brought to the notice of Government or to the authorities concerned. There is no use of raising them on the floor of the Assembly.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்போது திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதப்படி தனியார் பள்ளிகளிலுள்ள பல ஆசிரியர்கள் ஊதியம் பெறுவதில்லையாதலால், தனியார் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு அரசாங்கமே நேரடியாகச் சம்பளம் கொடுக்குமாறு செய்ய முன் வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி புகார் வருகின்ற போது அதற்குத் தகுந்தபடி நடவடிக்கை எடுக்கப்படும். கனம் அங்கத்தினர் நினைப்பதுபோல் பல இடங்களில் இந்தப் புகார் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு சில இடங்களில் இந்தத் தவறு இருக்குமானால் அதை நிவர்த்தி செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : ஹையர் கிரேட் பாஸ் செய்தவர்களும், ஜூனியர் பேஸிக் டிரெயினிங், செக்கண்டரி கிரேட் பாஸ் செய்தவர்களும் வேலையில்லாத காரணத்தால் லோயர் கிரேட் ஆசிரியர்களின் சம்பளத்தையே பெற்றுக்கொண்டு ஆசிரியர் வேலை செய்கிறார்கள். இதை ஒழிக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மூல கேள்விக்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் விவரங்களுக்கும் சம்பந்தமில்லை.

SRI K. VINAYAKAM : As a matter of fact, in spite of the repeated requests made to the authorities in the department concerned, no panacea was achieved. That is why this complaint is brought to the notice of the Hon. Minister on the floor of the House. Will the Hon. Minister assure us that he would issue instructions that this kind of disparity should not exist anywhere in our State?

THE HON. SRI C. SUBRAMANIAM : If such instances are brought to my notice I shall see what action should be taken.

University teachers

* 644 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the University Grants Commission has recommended to the State Government the abolition of special representations for University teachers in the Upper House; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, பல்கலைக் கழக நிதி உதவிக் குழு தீர்மானித்தபடி சென்னை பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்கள் ஊதியம் பெற்று வருகின்றார்கள் என்றாலும். . . . (குறுக்கீடு.)

7th March 1961]

Mr. SPEAKER : இந்தக் கேள்வி ஆசிரியர்களுக்கு (பல்கலைக் கழகம்) மேல்சபையில் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமா என்பதைப்பற்றியது. கனம் அங்கத்தினர் கேட்கும் விபரங்களுக் கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

Provision stores (Minister's visit)

* 645 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Minister paid a surprise visit to any provision store on 6th December 1960; and

(*b*) if so, the result of his enquiries?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) The visit only emphasised the fact that prices of food articles were still ruling high at the time of my visit.

Sri A. A. RASHEED : May I know whether the Hon. Minister visited these shops in disguise?

The Hon. Sri C. SUBRAMANIAM : I visited in the same dress in which I am appearing before the House.

Sri A. A. RASHEED : Is it not a fact that the store-keeper immediately revised the prices after he came to know that the visitor was a Minister?

The Hon. Sri C. SUBRAMANIAM : I did not expect any reduction. As a mater of fact I made inquiries and certainly after some time the prices were quoted at a lesser rate. I did not know whether he did it because he knew I was a Minister or he himself wanted to strike a bargain.

Sri A. GOVINDASAMI : கடைக்குப் போய்தான் விலை உயர்வைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆலோசனை வெளி நாட்டுக்குச் சென்றுவிட்டு வந்தபிறகுதான் அமைச்சர் அவர் களுக்குத் தோன்றியதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : நமது ரெவின்யூ அமைச் சர் அவர்கள் அடிக்கடி இந்த முறையைக் கையாளுகிறார்கள். இதைத் தெரிந்துகொள்வதற்கு வெளி நாடுகளுக்குச் செல்ல வேண்டியதில்லை (சிரிப்பு.)

Sri A. A. RASHEED : If prices were to come down due to Hon. Minister's visit and if the visit were to be of such help, will the Hon. Minister continue to pay such visits?

The Hon. Sri C. SUBRAMANIAM : If I were to announce about my visit, it may not have effect at all. Visits should be surprise visits.

[7th March 1961

Fibre

* 646 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the units manufacturing druggets and other products of sun-hemp fibre in Aikudy in Shencottah taluk, Tirunelveli district are receiving any aid from the Government;

(*b*) if so, the help or assistance they receive; and

(*c*) whether the manufacture of cumblies and carpets are encouraged in these units?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) There are no Government or private units at Aikudy engaged in the manufacture of sun-hemp druggets. However, there are a few private units engaged in the manufacture of other products such as easy-chair canvas, gunny bags, bailing hoses and yarn, utilising sun-hemp fibre. These units are not receiving any aid from Government.

(*b*) & (*c*) Do not arise.

* 647 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the places where aloe fibre is utilized for weaving robes, cumblies, etc.; and

(*b*) the nature of aid given to this cottage industry?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Aloe fibre is not used in any place in the State for the manufacture of robes and cumblies. It is used mainly as warp in the weaving of korai mats in almost all the districts of Madras, for weaving of mats and mattings at Neduvayal in Tirunelveli district and for manufacturing fancy items like hand-bags, etc., at Gobichettipalayam in Coimbatore district.

(*b*) This industry is eligible to obtain financial assistance under the State Aid to Industries Act. A Training-*cum*-Production Centre is being run at Neduvayal in Tirunelveli district to impart training in the industry.

* 648 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the aloe-fibre industry in Tenkasi taluk, Tirunelveli district, is facing a crisis because of the indiscriminate import of African fibre by the Central Government; and

(*b*) if so, whether this Government have represented the matter to the Central Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI K. SATTANATHA KARAYALAR: நெடுவயலில் நடந்து கொண்டிருக்கக்கூடிய ஆராய்ச்சி சென்டரில் இதுவரை எத்தனை பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது? அதன் மூலம் எத்தனை பேர்கள் கத்தாழை தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கிறார்கள்?

7th March 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : So far eight batches of spinning and two batches of weaving trainees have been trained in the centre. மற்ற கேள்வியைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த கற்றாழை நார் நமது நாட்டிலே பல சிறு குடிசைத் தொழிலில் பயன்படுவதைத் தவிர வேறு ரோப்-மேகிங், இன்ஸுலேஷன் பர்ப்பஸஸில் உபயோகப்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படி உபயோகப்படுத்துவதிலே வெளி நாட்டிலிருந்து வரக்கூடிய கற்றாழையின் தரம் நல்லதாக, நீளமாகவும் மென்மையாகவும் இருப்பதால் அது தருவிக்கப்படுகிறது என்பதும் சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால் அத்தகைய கற்றாழையை இங்கே பயிரிட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றியெல்லாம் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

Kodikkarai Port

* 649 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள கோடிக்கரை துறைமுகத்தை இலங்கைக்குப் பிரயாணிகள் போக்கு வரத்திற்காகத் திறந்துவிட நம் அரசாங்கம் ஏதேனும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

(இ) கோடிக்கரை துறைமுகத்திற்கு மிக அருகாமையிலுள்ள இலங்கை காங்கேசன் துறைமுகத்திலிருந்து பிரயாணிகள் போக்குவரத்திற்குத் தயார் ஆவதாகக் கூறப்படுவதுபற்றி அந்த அரசாங்கத்துடன் நம் அரசாங்கம் தொடர்பு கொள்ள உத்தேசம் உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : : (*a*) The question of throwing open the Port of Calimere (Kodikarai) to passenger traffic has been considered on many occasions from 1940 and it was decided that no useful purpose will be served by opening the port for passenger traffic.

(*b*) No, Sir.

SRI A. VEDARATHNAM : ஸார், முன்பு தனுஷ்கோடி துறைமுகம் நல்ல நிலையில் இருந்தபோது இது பயனற்றது என்று கருதப்பட்டிருக்கிறது. இப்போது அந்த தனுஷ்கோடி துறைமுகமே பயனற்றதாக இருப்பதால் கோடிக்கரை துறைமுகத்தை இலங்கையோடு போக்குவரத்து செய்வதற்காக திறக்க அரசாங்கம் முன் வருமா ? இதுவரையில் எதிர்த்து வந்த இலங்கை அரசாங்கம் இப்போது இதைத் திறக்க அனுகூலமாக இருக்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து திறக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இலங்கை அரசாங்கம் அனுகூலமாக இருக்கிறது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை ; அதைப் பற்றித் தெரியாது. கனம் அங்கத்தினர் தனுஷ்கோடி துறைமுகம்

[7th March 1961

மூடப்படப்போகிறது என்று இதற்குள் முடிவுக்கு வருவது நல்ல தல்ல. அந்த மாதிரியான எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Pablo boats

* 650 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) how many Pablo boats are operating in the Ramanathapuram district under Government subsidy scheme;

(*b*) the total allotment made to this district;

(*c*) if more allotment has been made the reason for not having given the entire number of Pablo boats to this district; and

(*d*) whether some applications for allotment were rejected and if so, on what grounds?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Seven Pablo boats are operating in the Ramanathapuram district. Of these two are operated by the Inshore Fishing Station, Rameswaram.

(*b*) The total allotment made for the district was eight Pablo boats.

(*c*) & (*d*) The entire number of boats allotted could not be given on hire-purchase system as some of the applications were rejected in view of the fact that they did not satisfy the conditions for supply of Pablo boats on hire-purchase system and in some cases adverse reports from the Customs authorities were received.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether even though larger quantity of Pablo boats was allotted to this district lesser number was given to them actually, because the Customs Department had recommended that on suspicious grounds these boats, if allotted, would be indulging in smuggling?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : As they did not satisfy the conditions prescribed they were not allotted boats.

SRI K. VINAYAKAM : May I know, Sir, what are the conditions which were imposed upon them which they were unable to satisfy as per the requirements of the rules and regulations?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Pablo boats are given on the basis of Assistant Director's recommendation. An advance deposit of Rs. 5,000 to 30 feet and Rs. 4,000 for 25 feet should be made. The rest of the amount is recovered in instalments spread over seven years. I have already answered the other part of the question.

7th March 1961]

SRI K. VINAYAKAM : Would the Government be pleased to allot the required number of boats if the people who applied for this allotment satisfy these conditions at least this year?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : There would be no difficulty if they satisfy the conditions.

MR. SPEAKER : Questions are over.

[*Not*—**An asterisk (*) at the commencement of a speach indicates revision by the Member**].

II.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1961–62—*cont.*

MR. SPEAKER : நாமெல்லோரும் எண்ணிக்கொண்டிருந்தது என்னவென்றால் இன்றைய தினம் முதலில் கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்திரம் பேசலாம், அதன் பிறகு கனம் அங்கத்தினர் அண்ணாதுரை பேசலாம், அதன் பிறகு கனம் நிதி அமைச்சர் ஸ்ரீ சுப்பிரமணியம் விவாதத்திற்கு பதில் அளிக்கலாம் என்பது. ஆனால் கனம் அங்கத்தினர் கல்யாணசுந்திரம் ஏதோ சில தவிர்க்க முடியாத காரணங்களினால் சென்னைக்கு வரமுடியவில்லை என்று இன்றைய தினம் தகவல் வந்துள்ளது. ஆகையினால் அவர் பேசப் போவதில்லை. இப்போது கனம் அங்கத்தினர் ஸ்ரீ அண்ணாதுரை பேசுவார். அவர் பேசிய பிறகு நிதி அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பார்.

SRI C. N. ANNADURAI : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லிக்கொண்டு போகின்ற நேரத்தில், அதிலுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லுகின்ற அவசரத்தில் அமைச்சரவை செய்திருக்கின்ற சில நல்ல காரியங்களைப் பாராட்டாமல் விட்டு விடுவோமோ என்ற பயத்தில் முதலில் இந்த அமைச்சரவை செய்திருக்கின்ற இரண்டொரு நல்ல காரியங்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். ஜனநாயகத்திலே தங்களுக்கு இருக்கின்ற எண்ணிக்கை பலத்தை வைத்துக் கொண்டு அவர்கள் தமிழகத்திற்குச் செய்யவேண்டிய மிகச் சாதாரண கடமைகளைக்கூட விட்டு விடுவார்களோ என்று நாங்களெல்லாம் மன வேதனைப்பட்டுக்கொண்டு இருந்த பிரச்னையில் இந்த நாட்டுக்குத் தமிழ் நாடு என்ற பெயரை இந்த அமைச்சரவை சூட்டியிருப்பது, ஓரளவிற்கு அதில் சில குறைபாடுகளும் குந்தகங்களும் இருக்கின்றன என்றாலும் ஒரு நல்ல முயற்சியில் அடி எடுத்து வைத்திருக்கிறார்கள் என்ற அளவில் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப் போலவே இலவசக் கல்வியை எல்லா ஏழை மாணவர்களுக்கும் 11-வது வகுப்பு வரையில் அவர்களுக்கு இருக்கின்ற இலவசக் கல்வியை அதிகப்படுத்துகின்ற திட்டத்தை ஏற்றுக்கொண்டிருப்பதும் பாராட்டத் தக்கதாகும். அவர்களைப் பாராட்டும் நேரத்திலேகூட இப்படிப்பட்ட காரியங்களைப் பற்றி எதிர் தரப்பிலே உள்ள கட்சிக்காரர்கள் ஆகிய . . .

III.—ANNOUNCEMENT *RE* DEMISE OF SRI PANDIT GOVIND BALLABH PANT, UNION MINISTER FOR HOME AFFAIRS.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்களே, நமது மத்திய அரசாங்கத்தின் உள் துறை அமைச்சராகிய திருவாளர் கோவிந்த பல்லப் பந்த் அவர்கள் காலமான செய்தியை மிகவும் வருத்தத்தோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கனம் முதலமைச்சர் அவர்களும், கனம் நிதி அமைச்சர் அவர்களும் அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் முறையில் இன்றைய தினம் இத்துடன் சபையின் நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, நாளைய தினம் மேற்கொண்டு நடத்திக்கொள்ளலாம் என்று அபிப்பிராயம் தெரிவிக்கின்றார்கள். இதில் இந்தச் சபைக்கு ஆட்சேபம் ஏதுமில்லையென்றால் இந்தச் சபையை நாளை வரையில் ஒத்தி வைக்கலாம் . . .

AN HON. MEMBER : அனுதாபத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டாமா ?

MR. SPEAKER : அதை நாளை வைத்துக்கொள்ளலாம். இப்போது சபை எழுந்து நாளை காலை 8-30 மணிக்குத் திரும்பவும் கூடும்.

The House then adjourned.

Appendix

[Vide answer to the starred question No. 628 asked by Sri S. M. Annamalai (on behalf of Sri T. S. Ramaswami, at the meeting of the Legislative Assembly held on 7th March 1961, page 431 supra.]

Details of the Master Plan for the improvement and extension of the Government Headquarters Hospital, Nagercoil, in regard to buildings, cost of construction of each, etc.

Description of buildings. (1)	Approximate cost. (2)
	RS.
1 Hospital buildings, Main block with operation wards, operation theatres, surgeons' room, lift room, ramp, etc. (three-storeyed portion).	9,86,000
2 Veneral Diseases Clinic, X-ray and Blood-Bank portion, etc. (two-storeyed portion).	2,67,000
3 Public Health Clinic and connecting corridor (two-storeyed portion).	1,88,000
4 Kitchen block (single-storeyed portion)	55,000
5 Out-patient block on eastern side (single-storeyed portion) ..	82,000
6 Re-roofing of the tiled portion of room into R.C. Terrace (single-storeyed building).	10,200
7 Sterilisation room and Reserve Linen room (single-storeyed building).	37,500
8 Mortuary and Post-mortem shed (single-storeyed portion) ..	19,500
9 Medical Store and Furniture store (single-storeyed portion) ..	49,000
10 Latrine (single-storeyed portion)	1,300
11 Bathroom attached to isolation ward and connecting corridors.	9,600
12 Addition to Venereal Diseases Block, Duty bath, etc. ..	32,000
13 Bath attached to ante-natal ward	1,500
14 Bath and Lavatory attached to septic Post-natal ward and sterilisation block.	7,000
15 Tiffin room (single-storeyed portion)	10,800
16 Improvements to existing general ward and labour room as provided in the improvement estimate.	35,700
17 Residential buildings (R.M.O's quarters single-storeyed portion).	17,800
18 Garage for one car and ambulance	12,200
19 Provision of dhobi khana and cow-shed	5,000
20 Miscellaneous works such as water-supply and drainage arrangements, forming of roads, levelling of sites, compound wall, gates, etc.	1,13,400
Total ..	19,40,500

[7th March 1961

Phasing of construction.—The Master Plan drawn up to serve as a guide for the future expansion of the hospital includes certain items of new works already sanctioned for the institution. They are remodelling of the hospital, improvements to the existing buildings of the hospital and construction of a Venereal Diseases Clinic and a Public Health Laboratory, at a total estimated cost of Rs. 7,59,200. For the present these works alone will be executed within the existing hospital compound. Other items of works included in the Master Plan have not been sanctioned and they will be taken up only as and when the need for further expansion of the facilities in the hospital arises in future.

Equipments.—The Master Plan does not contain any provision for the purchase of equipment. The question of providing additional items of equipment for the hospital will have to be taken up when the construction of the buildings already sanctioned reach the final stage.

